[31st March 1969

இல்லாமல் தேங்கியிருக்கும் நிலையில் குறைந்த பட்சம் அங்கே விவசாயத்திற்காக 80 எக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த அளவில் ரூ. 5,000 அதற்காகக் கடன் உதவ வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அந்தத் தொகையை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். முழுமையும் கடனாகத் தருவோம் என்றும், ரூ. 500 சகாயத் தொகையாகவும், ரூ. 4,500 கடனாகவும் இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் அவ்வளவு கொடுக்க முடியாது என்று தெரிகிறது. அந்த முறையில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதென்றால் திருச்செந்தூர் பகுதியில் உடன்குடி வட்டாரத்தில்தான் சாகுபடி செய்யும் நிலைமையிருக்கிறது. நிகர ஆதாயம் குறைந்த பட்சம் ரூ. 1,770 கிடைக்குமென்று சொல்கிறார்கள். சராசரியாகப் பார்த்தால் ஒரு போகத்தில் 25 மூட்டை விளையும் என்று எதிர்பார்க்கிறோம்.

Admission into Medical Colleges.

*341 Q.—THIRUVALARGAL M. RAJAH IYER and N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to lay a paper on the table of the House indicating the number of students selected for admission into the Medical Colleges in the State during 1968–69, district-wise?

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்தல்

திரு. எம். ராஜா அய்யர், திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.

1968–69-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1968–69-ம் ஆண்டில் மாவட்ட வாரியாக இட ஒதுக்கல் செய்யப்படவில்லை.

திரு. வி. ஈஸ்வர மூர்த்தி : மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட பின்பு பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக மாவட்ட வாரியாக இவ்வளவு மாணவர்கள் எடுக்கப்பட்டார்கள் என்ற விவரத்தை அரசாங்கம் அறிவிக்குமா ? அப்படி அறிவிப்பதில் என்ன பிரச்னை இருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றுதான் கூறினேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கொடுப்பதைப் பற்றி இப்போது யோசனை இல்லை.

Primary Health Centres.

* 342. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(a) the number of blocks without Primary Health Centres; and

(b) the number of Primary Health Centres functioning without doctors either with L.I.M., G.C.I.M. or M.B.B.S. qualifications?